# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 11 | நாடகமும் அரங்கியலும் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி - I

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. காண்பிய வழி சித்தரிப்பு என்பது.
   1) உடல் உறுப்புக்களால் சித்தரிப்பது
   2) முகபாவங்களால் சித்தரிப்படுவது
   3) குரலால் சித்தரிக்கப்படுவது
   4) வேட உடை, ஒப்பனை மற்றும் அரங்கப் பொருள்களால் சித்தரிக்கப்படுவது

02. ஊமம் என்பது.
   1) செயலை ஆடல் வழியாக சித்தரிப்பது
   2) தாளம் சந்தத்திற்கு ஏற்பபாடி நடித்தல்
   3) வாய்மொழியை பயன்படுத்தாது நடிபாகத்தை சித்தரிப்பது
   4) பாடல், ஆடல் வழியாகச் சித்தரிப்பது

03. பாத்திரமொன்றின் சமூகவியல் பண்பை எடுத்துக்காட்டுவது.
   1) பௌதீக இயல்பு   2) நடத்தைக் கோலம்
   3) விருப்பு வெறுப்பு   4) தொழில், இனம்

04. பின்வருவனவற்றுள் மலையகக் கூத்து.
   1) காத்தான்கூத்து   2) காமன் கூத்து
   3) மகிடிக் கூத்து   4) கோவலன் கூத்து

05. ஆரொடு நோகேன் நாடகம்.
   1) சிறுவர் நாடகம்   2) பா நாடகம்
   3) பாடசாலை நாடகம்   4) அரசன் நாடகம்

06. ஆரொடு நோகேன் நாடகத்தில் இடம்பெறும் மூன்றாம் குடும்ப பாத்திரங்களைக் கொண்ட தொகுதி.
   1) ராஜ்குமார், சீலா, றஜீவ், ஆரணி
   2) இராஜதுரை, சரோஜினி, ஆரணி, அம்பிகை
   3) இராஜதுரை, செல்வராணி, ஆரணி, ரஜீவ்
   4) றஞ்சித்குமார், சுபத்திரா, ஷங்கரி

07. தானயம்பொல எனும் அரங்க வெளியில் ஆடப்படும் ஆற்றுகை வடிவம்.
   1) கூத்து   2) கோலம்   3) சொக்கரி   4) நாடகம்

08. கருத்தூன்றல் பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கப்படும் அரங்க விளையாட்டு
   1) இறால், நண்டு, மீன்   2) ஆடும் வீடும்
   3) நாரை நாராய்   4) கரடியும் கிராம மக்களும்

09. ‘‘உடக்குப்பாஸ்’’ எனும் நாடக நிலைச் சடங்கு ஆடப்படும் இடம்.

1) வங்காலை 2) முருங்கன் 3) பேசாலை 4) நானாட்டான்

10. நாடகத் தயாரிப்பின் போது விளம்பரம் செய்தல், விற்பனை சீட்டுக்களை விநியோகம் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்.

1) நடிகர் 2) நெறியாளர் 3) தயாரிப்பாளர் 4) மேடை முகாமையாளர்

11. நாடக எழுத்துருவிற்கு உயர் கொடுத்து அரங்கில் உலாவ விடுபவர்

1) தயாரிப்பாளர் 2) நடிகர் 3) நெறியாளர் 4) நாடக ஆசிரியர்

12. மேடைப் பரப்பொன்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி எது

1) UL, UR 2) CL, CR 3) CU, CC 4) DL, RD

13. அண்ணாவி நாடக மரபு என அழைக்கப்படும் கலை வடிவம்

1) கூத்து 2) இசை நாடகம் 3) வில்லுப்பாட்டு 4) பரதர்

14. நாடகம் என்பது அசைவுகளின் தொகுதி எனக் கூறியவர் யார்.

1) மரிஸ்பெயாட் 2) அரிஸ்ரோட்டில் 3) பரதர் 4) J.J தொம்சன்

15. பத்தினி தெய்வத்துடன் தொடர்புடைய சிங்கள சடங்கு.

1) கோலம் 2) சொக்கரி 3) தொவில் 4) நாடகம்

16. நாடகத்தில் உடல் அசைவுகளின் பயன்பாடு.

1) மேடையில் இடங்களைச் சுட்டிக்காட்ட

2) இவ்வகை நாடகம் என எடுத்தியம்ப

3) பாத்திரத்தின் உணர்வுகளை எடுத்துக்காட்ட

4) நாடகத்திற்கு வலுவூட்டல்

17. நடிகரின் பேச்சு மொழி உச்சரிப்பை விருத்தி செய்வதற்கு மிக அவசியமானது.

1) புலனடக்கப்பயிற்சி 2) தளர்வுப்பயிற்சி

3) சுவாசப் பயிற்சி 4) தியானம்

18. வேடமுகம் பயன்படுத்தும் சிங்கள நாடகம்.

1) கோலம் 2) சொக்கரி 3) தொவில் 4) நூர்த்தி

19. ஸ்பெசல் நாடக மரபில் சிறந்து விளங்கிய நடிகர்

1) பிரான்சிஸ் ஜெனம் 2) அ. தாசீசியஸ்

3) எம்.வி கிருஸ்ணாழ்வார் 4) நா.சுந்தரலிங்கம்

20. பின்வருவனவற்றில் மோடிமைப்படுத்தப்பட்ட நாடகம் எது.

1) சுந்தரம் எங்கோ 2) சங்கிலி

3) இராவணேசன் 4) உடையார்மிடுக்கு

21. அரங்கில் நடைபெறும் ஒரு விடயத்தை குறிப்பாகக் காட்டப்பயன்படும் ஒலிவகை

1) பெருக்கொளி 2) வர்ணச்சில்லு 3) பொட்டொளி 4) கரைஒளி

22. மரபுவழிக் கூத்தொன்றில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொள்பவர்

1) சபையோர் 2) கட்டியக்காரன் 2) பாத்திரங்கள் 4) பபூன்

23. வாசிப்பு அரங்கில் காட்சி படிமங்கள் தோன்றுவது

1) அரங்கவெளியில் 2) மேடையில் 3) எழுத்துருவில் 4) மனவெளியில்

24. புதிய தொரு வீடு நாடகத்தின் மையக்கருத்திற்கு அழுத்தம் கொடுக்கும் பாடல்

1) போகாத வழி மீதல் 2) காலை எழுந்து வந்து

3) தூரத்தே ஏலே வெண்மணலே 4) சிறு நண்டு மணல் மீது

25. ஆரொடு நோகேன் நாடகத்தின் பிரதான காட்சிப்பொருள்

1) வீடு 2) கதிரை 3) வாயிற்படிக்கட்டு 4) நிலைக்கண்ணாடி

26. நடிகர் தேர்வில் ஒரு பாத்திரத்தினூடாக இன்னொரு பாத்திரத்தினை தெரிவு செய்யும் முறை.

1) நேர்முகத் தேரிவு 2) சல்லடைத் தேரிவு

3) நிறந்த தெரிவு 4) மூடிய தெரிவு

27. ஆற்றுவோரும் பார்ப்போரும் நேரடித் தொடர்பினைக் கொண்ட கலை வடிவம்.

1) நாடகம் 2) நடனம் 3) வில்லுப்பாட்டு 4) மேற்கூறிய யாவும் சரி

28. கிரேக்க மரபில் பார்ப்போருக்கு ஏற்படும் உளர்க் கிளர்வு நிலை.

1) அபிநயம் 2) கதாசிஸ் 3) ரசம் 4) மெய்ப்பாடு

29. பாத்திரத்தில் சித்தரிப்பின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

1) கரு 2) பாத்திர பண்புகள்

3) பண்பாடு கலாசார பின்னணி 4) மேற்கூறிய யாவும்

30. ‘அண்டம் உலாவிய மாவில்…….’ என்ற பாடல் இடம் பெறும் நாடகம்.

1) காமன் கூத்து 2) வசந்தன் கூத்து

3) காத்தான் கூத்து 4) பூதத்தம்பி

31. ஒளியமைப்பின் பிரதான பணிகளில் ஒன்று.

1) மேடையை அழகுபடுத்தல்

2) காட்சிகளை தெளிவாக்க

3) நரகத்தின் உணர்வு நிலையை முனைப்புறுத்திக் காட்டுதல்

4) நடிகர்களை காட்டுவதற்கு

32. தமிழ்நாட்டில் சிறுவர் அரங்கிற்கென முத்திரை பதித்து கொண்டவர்.

1) ந.முத்துசாமி 2) வெளி.ரெங்கராயன்

3) ஏ.ஜே.குணசேகரன் 4) வேலு சரவணன்

33. பின்வருவனவற்றில் யாழ்ப்பாண தென்மோடி கூத்துக்களுள் அடங்காதது.

1) எஸ்தாக்கியா 2) தேவ சகாயம் பிள்ளை

3) கருங்குயில் குன்றத்து கொலை 4) பப்பிரவாகன்

34. யுதார்த்த நாடகத்தில் வரும் பாத்திரங்களின் வேட உடை.

1) குறியீட்டுத் தன்மையானதாக இருக்கும்

2) யதார்த்தமும் குறியீட்டுத்தன்மையானதாகவும் காணப்படும்

3) பகட்டு ஆடம்பரமாக இருக்கும்

4) இயல்பாக பாத்திரம் பண்பை வெளிப்படுத்துவதாக இருக்கும்

35. அரங்க விளையாட்டை விளையாடுவதன் மூலம் பெறப்படும் திறன்கள் அல்லாதது.

1) கற்பனைத் திறன்    2) கவலையடைதல்

3) மனதை ஒருநிலைப்படுத்தல்    4) மேற்கூறிய யாவும்

36. தோணி என்னும் சிறுகதையை எழுதியவர்.

1) ஆ.செ.முருகானந்தம்    2) வ.அ.இராசரத்தினம்

3) ச.சண்முகநாதன்    4) அ.தாசீசியஸ்

37. யாதாயினும் ஒரு விடயம் தொடர்பில் ஏற்படுகின்ற எதிரெதிர் நிலைகள்.

1) மோடி    2) கரு    3) பாத்திரம்    4) மோதுகை

38. முல்லை மோடி என அழைக்கப்படும் கூத்துமரபு.

1) காமன்கூத்து    2) கோவலன் கூத்து

3) அருச்சுனன்தபசு    4) காத்தவராஜன் கூத்து

39. படத்தில் காட்டப்படும் அரங்கவியலாளர் நெறியாள்கை செய்த நாடகம்.



1) புதியதொரு வீடு

2) ஆரொடு நோகேன்

3) வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்

4) எந்தையும் தாயும்

40. படத்தில் காட்டப்பட்ட சடங்கு.



1) சூரன்போர்

2) பாண்டவர் வனவாசகம்

3) குளிர்த்தி

4) வேட்டைத்திருவிழா

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

(01) சுருக்கமான விடை தருக.

01. புதிதளித்தல் என்றால் என்ன?

02. மகிடிக்கூத்து ஆடப்படும் பிரதேசம் யாது?

03. கூத்திலே மாத்துப்பூசுதல் என்றால் என்ன?

04. இறுதி ஒத்திகையை எவ்வாறு அழைப்பர்?

05. ஆண்டுதோறும் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றும் நிறுவனம் எது?

06. வசந்தகான சுபாவினைத் தோற்றுவித்தவர் யார்?

07. பபூன் பாத்திரம் இடம்பெறும் நாடக வகை யாது?

08. ஈழத்து இசை நாடக வரலாறு எனும் நூலை எழுதியவர் யார்?

09. அரங்க வெளிகள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக?

10. ஆக்கும் கலைகள் இரண்டை குறிப்பிடுக    (12 x 1 = 12 புள்ளிகள்)

(02) அ) ஆற்றுகைக் கலைகள் மூன்று தருக?

ஆ) ஆற்றுகைக் கலைகளின் பண்புகள் நான்கு தருக?

இ) மேடை நாடகமானது, தொலைக்காட்சி நாடகம், இலக்கியம் ஆகிய கலைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(03) அ) நாடக நிலைப்பட்ட சமயச் சடங்குகள் மூன்றினை குறிப்பிடுக.

ஆ) நீர் மேலே குறிப்பிட்ட நாடகச் சடங்கில் இரண்டைக் குறிப்பிட்டு அச்சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகளைக் குறிப்பிடுக?

(3 + 9 = 12 புள்ளிகள்)

(04) அ) அரங்கப் பயிற்சி என்றால் என்ன?

ஆ) அரங்கப் பயிற்சிகளுக்கு உதாரணத்தை குறிப்பிடுக?

இ) நடிப்பு நுட்பங்களைக் கூறி அவை நடிகருக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(05) அ) கூத்து ஆடப்படும் பிரதேசங்களையும் அங்கு ஆடப்படும் கூத்துகளையும் பட்டியற்படுத்துக.

ஆ) மேலே நீர் கூறிய கூத்துகளில் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 + 6 = 12 புள்ளிகள்)

(06) அ) புதிய தெரு வீடு நாடகத்தின் ஒரு கரு யாது

ஆ) புதிய தெரு வீடு நாடகத்தில் வரும் பாத்திரங்களை குறிப்பிடுக.

இ) மேலே குறிப்பிட்ட பாத்திரங்களில் இரண்டைக் குறிப்பிட்டு அப்பாத்திரங்களின் பண்புகளை குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

(07) பின்வரும் கலைஞர்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக

அ) நெறியாளர்

ஆ) தயாரிப்பாளர்

இ) பார்வையாளர்

(4 x 3 = 12 புள்ளிகள்)